# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



Applicant

(64)

நகர் ஊரமைப்பு துறை

உறுப்பினர் செயலர்/துணை இயக்குநர், ஒசூர் புதுநகர் வளர்ச்சிக் குழுமம், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்களின் நடவடிக்கைகள் முன்னிலை: திரு.கி.சண்முகம், எம்.இ., எம்.பி.ஏ.,

ந.க.எண்.213/2022/கிமா(ஒபுநவகு) நாள்: 30.06.2022

பொருள் : மனைப்பிரிவு – மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் – கிருஷ்ணகிரி மாவட்டம் – ஒசூர் புதுநகர் வளர்ச்சிக் குழுமம் – ஒசூர் வட்டம் – ஒசூர் ஊராட்சி ஒன்றியம் – அச்செட்டிப்பள்ளி ஊராட்சி – நலிகபெட்டா அக்ரஹாரம் கிராமம் சர்வே எண்.40/5-ல் பரப்பு 0.35.00 ஹெக்டேர் (அ) 3500.00ச.மீ பரப்பளவு இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு அனுமதி கோரியது – ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :

1. மனுதாரர் Mr. John Richard S/o. Mr. S.Savarinathan, கிருஷ்ணகிரி அவர்களின் விண்ணப்பம் நாள்: 28.01.2022 மற்றும் 06.04.2022.
2. உறுப்பினர் செயலர், ஒசூர் புதுநகர் வளர்ச்சி குழுமம், மாவட்ட நகர் ஊராமைப்பு அலுவலகம், கிருஷ்ணகிரி அவர்களின் கடிதம் ந.க.எண்.213/2022/கிமா(ஒபுநவகு), நாள்.12.04.2022.
3. மனுதாரர் Mr. John Richard S/o. Mr. S.Savarinathan, கிருஷ்ணகிரி அவர்களின் கடிதம் நாள். 13.06.2022.
4. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.19799/2020/போ.நாள்:24.12.2020.
5. அரசாணை எண்.138, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்.04.06.2004.
6. அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை, நாள்.04.02.2019 மற்றும் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.31.01.2020.
7. அரசாணை எண்.141, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை UD4(3), நாள்.23.09.2020.
8. அரசாணை எண்.181, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை UD4(1), நாள்.09.12.2020.
9. அரசு கடிதம் எண்.19113/நவ4(3).2017-1, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்.30.08.2017.
10. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.13686/2017/LA1, நாள்.08.09.2017.
11. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.5534/1997/முதி1நாள்.13.08.1999.

12. உறுப்பினர் செயலர், ஒசூர் புதுநகர் வளர்ச்சி குழுமம், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், கிருஷ்ணகிரி அவர்களின் கடிதம் ந.க.எண்.213/2022/கிமா(ஒபுநவகு), நாள்.22.06.2022. (கட்டணங்கள் செலுத்தக் கோரப்பட்டது)
13. மனுதாரர் Mr.John Richard S/o. S.Savarinathan, கிருஷ்ணகிரி அவர்களின் கடிதம் நாள்.27.06.2022. (கட்டணங்கள் செலுத்திப்பெறப்பட்டது.)

*******

**உத்தரவு**

கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் புதுநகர் வளர்ச்சிக் குழுமம், ஒசூர் வட்டம், ஒசூர் ஊராட்சி ஒன்றியம், அச்செட்டிப்பள்ளி ஊராட்சி, நலிகெபெட்டா அக்ரஹாரம் கிராமம் சர்வே எண்.40/5-ல் பரப்பு 0.35.00 ஹெக்டேர் (அ) 3500.00ச.மீ பரப்பளவு இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு அனுமதி கோரி பார்வை (1)-ல் சுட்டிய கடிதத்துடன் பெறப்பட்ட விண்ணப்பம் மற்றும் இணைப்பு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு, பார்வை (2)-ல் காணும் இவ்வலுவலக கடிதம் மூலம் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் ஒப்புதல் அளிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டது.

பார்வை (3)-ல் காணும் கடிதத்தின்படி சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகளை தலைவர், அச்செட்டிப்பள்ளி ஊராட்சி, ஒசூர் ஊராட்சி ஒன்றியம் அவர்களுக்கு தானப்பத்திர எண்.11005/2022, நாள்.10.06.2022-ல் தானமாக ஒப்படைக்கப்பட்டும், மற்றும் தலைவர் / நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், கிருஷ்ணகிரி அவர்களுக்கு தானப்பத்திர எண்.11004/2022, நாள்.10.06.2022-ல் தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டும் பெறப்பட்டுள்ளதனைத்தொடர்ந்து உத்தேச மனைப்பிரிவுக்கு கீழ்காணும் ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

**அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடு விபரம்**

| விவரம் | | பரப்பளவு |
|---|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | : | 0.35.00 ஹெக்டேர் (அ) 3500 ச.மீ |
| கோரிய மனைகள் | : | 20 மனைகள் |
| ஒதுக்கிய மனைகள் | : | 17 மனைகள் |
| மனைப்பிரிவு சாலை பரப்பு | : | 1116.92 ச.மீ. |
| மனைப்பிரிவு பரப்பு(சாலை பரப்பு நீங்கலாக) | : | 2383.08 ச.மீ. |
| **பொது ஒதுக்கீடு:** | | |
| **உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை:** | | |
| மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு | : | 1116.92 ச.மீ. |
| உள்ளாட்சிக்கான பொது உபயோகம் | : | 35.98 ச.மீ. (1.50 %) |
| தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கான பொது ஒதுக்கீடு | : | 44.60 ச.மீ. (1.87 %) |

66

மனைப்பிரிவிற்கு இணைப்பில் உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி, ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ./ஒ.பு.ந.வ.கு.(கிமா) எண்.59/2022 என எண்ணிடப்பட்டு மனை ஒப்புதல் வழங்கப்படுகிறது.

நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 49-ன் கீழ் திட்ட அனுமதி வழங்கும் பொருட்டு, மனைப்பிரிவு வரைபடத்திற்கு திட்ட அனுமதி ம.வ/தி.அ/ஒ.பு.ந.வ.கு(கி.மா)எண்.12/2022 என எண்ணிடப்பட்டு நிபந்தனைகளுடன் திட்ட அனுமதி வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட 2 அசல் வரைபடங்கள் மேல்நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

மேலும், உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும் போது மனைப்பிரிவு நிபந்தனை எண்.9(ஆ)-ன்படி அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப்பதிவு அலுவலகத்திற்கும், நில அளவைத் துறைக்கும், தகவலுக்கும் உரிய நடிவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

செயலாணைக் கடிதம், மனைப்பிரிவு நிபந்தனைகள், வரைபடங்கள் மற்றும் அசல் தானபத்திரம் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகைச்சான்றினை உடன் அனுப்பி வைக்குமாறு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**சிறப்பு நிபந்தனை:**

1. (a) பார்வை (8)-ல் கண்ட அரசாணை மற்றும் பார்வை (6)-ல் கண்ட TNCDBR-2019 விதி எண்.47(11)-ன்படியும் மாநகராட்சி / நகராட்சி பகுதி எனில் "Collecting the necessary fees including the charges for providing amenities like roads, storm water drains and street lights from the applicants". After collecting the necessary fees the final layout sketch, permit of planning authority along with approval of Local Body shall be issued to the applicant(s) directly.
2. (b) மாநகராட்சி / நகராட்சி அல்லாத பகுதிகளில் "Shall collect the necessary fees and issue the final layout sketch, permit of planning authority along with the permit of local body to the applicant(s) directly, only after ensuring that the applicant lays Tar Roads. Provide other amenities like storm water drains, water supply facilities by constructing required OHT, provide necessary street lights etc., as per the standards specified by the Local Body".
3. (EWS) பொருளாதாரத்தால் பின்தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது. ஆனால் கிராமப்புற பகுதிகளில் மனை ஒப்புதல் வழங்கப்பட்ட 3 வருடங்களுக்கு மேலாகியும் EWS மனைகள் விற்க இயலாத நிலை இருப்பின் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.31.01.2021-ன் படி EWS மனைகளை ஒருங்கிணைப்பு செய்ய விண்ணப்பித்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.

4. பார்வை (9) மற்றும் (10)-ல் கண்ட அரசு கடிதம் மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சியின் பெயரில் உரிமை மாற்றம் செய்து வருவாய் ஆவணங்களில் சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
5. "The Tamil Nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department dated:22.06.2017. have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016. The promotor has to advertise, market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be,in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority" ன்படி நடவடிக்கை தொடருமாறு மனுதாரரை கேட்டுக்கொள்ளப்படுகிறது.
6. பார்வை (5)-ல் காணும் அரசாணையின்படி நன்னிலைத்தொகை ரூ.5,100/-ம், பார்வை (6)-ல் காணும் அரசாணையின்படி OSR கட்டணம் ரூ.42,000/-ம், பார்வை (11)-ல் காணும் சுற்றறிக்கையின்படி வளர்ச்சிக்கட்டணம் ரூ.7,500/-ம், கொடிநாள் நிதி ரூ.2,000/-ம் மற்றும் தமிழரசு சந்தா ரூ.2,000/-ம் மனுதாரர் செலுத்தப்பட்டதற்கான விவரம் பெறப்பட்டுள்ளது.

**இணைப்பு:**

1. அசல் தானபத்திரம்
2. வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள்– 2 தொகுப்பு

உறுப்பினர் செயலர்/துணை இயக்குநர்,
ஒசூர் புதுநகர் வளர்ச்சிக் குழுமம்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர்.

**பெறுநர்:**

தலைவர், அச்செட்டிப்பள்ளி ஊராட்சி,
ஒசூர் ஊராட்சி ஒன்றியம்,
கிருஷ்ணகிரி மாவட்டம்.

**நகல்:**

1. Mr. S.JOHN RICHARDS/o. Mr. S.Savarinathan
D.No.17/5, Rayappa Mudhaliyar street,
Krishnagiri Taluk, Krishnagiri District. } உத்தரவு கடிதம் மட்டும்
2. The Chairman
Tamilnadu Real Estate Regulatory Authority,
No.1A, 1st Floor, CMDA Tower – 2,
Egmore, Chennai – 600 008.
3. உதவி இயக்குநர், நிலஅளவியல் துறை,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
கிருஷ்ணகிரி மாவட்டம்.
4. சார்பதிவாளர்,
சார்பதிவாளர் அலுவலகம், ஒசூர்.
5. இருப்புக்கோப்பு

} வரைபடம்-1 (ம) நிபந்தனைகள் படிவம்-1 (items 2–5)

# அச்செட்டிப்பள்ளி ஊராட்சி மன்றத்தலைவரின் செயல்முறைகள்
## முன்னிலை : திரு.ஆர்.ஸ்ரீனிவாசரெட்டி

ந.க.எண்: 1/2022/ஊ

நாள்: 14.07.2022

பொருள் : மனைப்பிரிவு அங்கீகாரம் - கிருஷ்ணகிரி மாவட்டம் - ஒசூர் ஊராட்சி ஒன்றியம் - அச்செட்டிப்பள்ளி ஊராட்சி நலிகபெட்டா அக்ரஹாரம் வருவாய் கிராம சர்வே எண்: 40/5 இல் 0.35.00 ஹெக்டேர் (அ) 3500 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட நிலத்தில் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு அங்கீகாரம் வழங்கி ஆணையிடுதல் - தொடர்பாக.

பார்வை

1. அரசாணை எண்.79, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (UD4(3) துறை நாள்: 04.05.2017.
2. அரசாணை எண்.138, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (UD4(3) துறை நாள்: 04.06.2004.
3. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்:19799/2020/போ./நாள்:24.12.2020.
4. அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாம் (ம) குடிநீர் வழங்கல் துறை, நாள்: 04.02.2019 மற்றும் 31.01.2020.
5. அரசாணை எண்: 141, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை (UD4(3) நாள்: 23.09.2020.
6. அரசாணை எண்.181, நகராட்சி நிர்வாகம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, (UDR(4) நாள்: 09.12.2020.
7. நகர் ஊரமைப்பு ஆணையாளர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்:13686/2017/LA-1, நாள்: 08.09.2017.
8. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்:12201/2017/சி.பி, நாள்: 22.09.2017.
9. அரசு கடிதம் எண்.19113/நவ4(3), 2017-1, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, நாள்:30.08.2017.
10. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்:13686/2017/LA, நாள்: 08.09.2017.
11. உறுப்பினர் செயலர், ஓசூர் புதுநகர் வளர்ச்சி குழுமம், கிருஷ்ணகிரி மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், ஓசூர் அவர்களின் ந.க.எண்: 213/2022/கி.மா (ஒபுநவகு) நாள்: 30.06.2022
12. தானப்பத்திர எண்:11005/2022, சார் பதிவாளர் அலுவலகம், கெலமங்கலம், நாள்: 10.06.2022.
13. மனுதாரர் Mr.S.John Richards S/o S.Savarinathan என்பவரின் விண்ணப்பம் நாள் : 05.07.2022.
14. அச்செட்டிப்பள்ளி ஊராட்சி மன்ற தீர்மான எண்.4/13.07.2022.

❁ ❁ ❁ ❁

ஆணை:-

கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர் ஊராட்சி ஒன்றியம் அச்செட்டிப்பள்ளி ஊராட்சி நலிகபெட்டா அக்ரஹாரம் வருவாய் கிராம சர்வே எண்: 40/5 இல் 0.35.00 ஹெக்டேர் (அ) 3500 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட நிலத்தில் அமையவுள்ள உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான வரைபடத்திற்கு தொழில்நுட்ப ஒப்புதல் ம.வ/ஒ.பு.ந.வ.கு (கி.மா) 59/2022 என எண்ணிடப்பட்டு ஒப்புதல் வரப்பெற்றுள்ளது.

மேலும் நகர் ஊரமைப்புச்சட்டம் 1971 பிரிவு 49-ன் கீழ் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ம.வ./தி.அ/ஓ.பு.ந.வ.கு (கி.மா) எண்.12/2022 என எண்ணிட்டு திட்ட அனுமதியும் பார்வை (11) இல் காணும் உத்திரவு கடிதத்தில் வழங்கி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

பார்வை-11 இல் காணும் உறுப்பினர் செயலர் (பொ), ஒசூர் புதுநகர் வளர்ச்சிக் குழுமம், ஒசூர் அவர்களின் இறுதி ஒப்புதல் ஆணையில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகள் அனைத்தும் பூர்த்தி செய்து கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் ஆணை வழங்கி உத்தரவிடப்படுகிறது.

**அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடு விபரம்**

| விபரம் | | பரப்பளவு விடுக்காடு |
|---|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | : | 0.35.00 ஹெக்டேர்(அ) 3500 ச.மீ |
| கோரிய மனைகள் | : | 20 மனைகள் |
| ஒதுக்கிய மனைகள் | : | 17 மனைகள் |
| மனைப்பிரிவு சாலை பரப்பு | : | 1116.92 ச.மீ |
| மனைப்பிரிவு பரப்பு (சாலை பரப்பு நீங்கலாக) | : | 2383.08 ச.மீ |
| பொது ஒதுக்கீடு :-<br>**உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை** | | |
| மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு | : | 1116.92 ச.மீ |
| உள்ளாட்சிக்கான பொது உபயோகம் | : | 35.98 ச.மீ (1.50%) |
| தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கான பொது ஒதுக்கீடு | : | 44.60 ச.மீ (1.87%) |

எனவே ஒசூர் ஊராட்சி ஒன்றியம், அச்செட்டிப்பள்ளி ஊராட்சி நலிகபெட்டா அக்ரஹாரம் வருவாய் கிராம சர்வே எண்: 40/5 இல் 0.35.00 ஹெக்டேர் (அ) 3500 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட நிலத்தில் அமையவுள்ள உத்தேச குடியிருப்பில் மனைகள் முறையே 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15, 16, 17 ஆகிய 17 மனைகள் கொண்ட குடியிருப்பு மனைப்பிரிவிற்கு பார்வை-11 இல் காணும் திட்ட அனுமதியின் இறுதி ஒப்புதல் அடிப்படையிலும், பார்வை-4 மற்றும் 6 இல் தெரிவிக்கப்பட்ட அரசாணைகளின்படி மனைப்பிரிவில் சாலை வசதி, குடிநீர் வசதி, தெருவிளக்கு வசதி கழிவுநீர் கால்வாய் வசதி ஆகியவை முழுமையாக செய்யப்பட்டுள்ளதாலும் அரசுக்கு செலுத்தப்படவேண்டிய தொகைகள் அனைத்தும் செலுத்தப்பட்டுள்ளதாலும் பார்வை 14 இன்படி ஊராட்சியில் முறையாக தீர்மான எண்.4/13.07.2022 படி இயற்றப்பட்டுள்ளதாலும் கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு இம்மனைப்பிரிவிற்கு அங்கீகாரம் வழங்கி இதன் வழி ஆணையிடப்படுகிறது.

**நிபந்தனைகள்**

1. உறுப்பினர் செயலர் (பொ), ஒசூர் புதுநகர் வளர்ச்சி குழுமம், கிருஷ்ணகிரி மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், ஒசூர் அவர்களின் பார்வை-11 இன்படி வரப்பெற்ற தொழில்நுட்ப மற்றும் திட்ட அனுமதி ஆணையின்படி வரைபடத்தில் உள்ள மனைகளுக்கு வழங்கிய ஒப்புதலில் குறிப்பிடப்பட்டுள்ள சிறப்பு நிபந்தனை பத்தி-1A, B இன்படியும் மற்றும் நிபந்தனையின் அடிப்படையில் அங்கீகாரம் வழங்கப்படுகிறது.

70

2. நகர் ஊரமைப்பு மற்றும் உள்ளாட்சித் துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்பு மற்றும் உள்ளாட்சித் துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.

3. அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள இடங்கள் தவிர மற்ற மனைகளை வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்படவேண்டும். இதில் கடை, பண்டகசாலை மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டிடம் கட்டுவதற்கு பயன்படுத்துதல் கூடாது. பொது வசதிகளுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள அனைத்து இடங்கள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களில் குறிக்கப்பட்டுள்ள உபயோகங்களுக்காக மட்டும் பயன்படுத்தப்படவேண்டும். அந்த இடங்கள் பார்வை-8, 9 இல் தெரிவிக்கப்பட்ட அரசுக் கடிதங்களின்படி பட்டா மாற்றம் செய்து வழங்கப்பட்டுள்ளது.

4. விரிவு அபிவிருத்தி திட்டப்பகுதிக்குள் அமையும் மனைப்பிரிவு எனில், திட்ட விதிகளின்படி தனித்தொரு குடியிருப்பு மனையில் தனித்தொரு குடியிருப்பு மட்டுமே கட்டப்படவேண்டும். இதற்கு மாறாக எக்காலத்திலும் தனிப்பட்ட மனைகளில் அங்கீகரிக்கப்பட்ட அளவினையோ அமைப்பையோ மாறுபடுத்தும் வகையில் எந்த மனையையும் பயன்படுத்தக் கூடாது.

5. இந்த மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்கியதற்கு தணிக்கையில் ஏதேனும் தொகை செலுத்தப்படவேண்டி இருப்பின் அத்தொகையினை ஒரே தவணையில் செலுத்திடவேண்டும்.

6. மனைப்பிரிவில் அமையவுள்ள கட்டுமானங்களுக்கு கிராம ஊராட்சியின் மூலம் நில வரைபட ஒப்புதல் பெறப்பட்டபின் கட்டுமான பணிகள் மேற்கொள்ள வேண்டும்.

7. நில உரிமை குறித்து வழங்கப்பட்ட ஆவணங்கள் தவறானவை அல்லது போலியானவை என கண்டறியப்பட்டால் மனைக்கு வழங்கப்பட்ட அங்கீகாரம் தாங்கள் 12.07.2022 அன்று வழங்கிய ரூ.100/- உறுதிமொழி பத்திரத்தின்படி எவ்வித முன் அறிவிப்பு இன்றி ரத்து செய்ய ஊராட்சி மன்றத்தலைவருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

8. சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிபடுத்திக் கொள்ளவேண்டும். மேலும், அதன்மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை மற்றும் உள்ளாட்சித்துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

9. மனைப்பிரிவு அமைய உள்ள இடத்தில் அரசுக்கு சொந்தமான புறம்போக்கு நிலங்கள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாக பின்னர் தெரியவரின் எவ்வித முன்னறிவிப்புமின்றி அங்கீகாரம் இரத்து செய்யப்படும். மேலும் மனுதாரர் சமர்ப்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின் படி சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் வழங்கிய சான்றினை ஏற்று நில உரிமை குறித்து பரிசீலக்கப்படுகிறது. எனவே, உண்மையில் நில உரிமம் இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கரீக்கப்பட்ட காரணத்திற்கு எந்த உரிமையும் கொண்டாட முடியாதெனவும் தெரிவிக்கப்பட்டுகிறது.

10. மனைப்பிரிவு அங்கீகரித்த மன்ற தீர்மான எண்ணும் நாளும் மன்றத்திற்கும் மனுதாரருக்கும் ஒப்பந்தமான நாளும் எண்ணும் தெளிவாக குறிப்பிட்டு அறிவிப்பு செய்யப்பட வேண்டும்.

(71)

11. மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத் துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகலினை மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

12. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் / விடுதலின்றி மனைப்பரிவு நுழைவாயிலில் 6' X 4' அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்காகவும் மேலும் மனைப்பிரிவு அங்கீகரித்த மன்றத் தீர்மான எண்ணும் நாளும் தெளிவாக குறிப்பிட்டு பொது மக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

13. நில உரிமை மறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு Planning Permission / Concurrence ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட Planning Permission / Concurrence ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி இரத்து செய்ய நேரிடும் என தெரிவிக்கப்படுகிறது.

14. மனுதாரர் சமர்ப்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின்படி நில உரிமை குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே, உண்மையில் நில உரிமை இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்கு எந்த உரிமையும் கொண்டாட முடியாதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

15. இம்மனைபிரிவின் நிலங்கள் தொடர்பாக நீதிமன்ற வழக்குகள் நிலுவையில் இருப்பது தெரியவரின் இம்மனைப்பிரிவினை முறைப்படுத்திய ஆணை எவ்வித முன் அறிவிப்பு இன்றி இரத்து செய்யப்படும்.

14/07/2022

ஊராட்சி மன்றத்தலைவர்
அச்செட்டிப்பள்ளி ஊராட்சி.

PRESIDENT
Achettipalli Panchayat
HOSUR UNION

14/7/2022

பெறுதல்:-

Mr.S.JOHN RICHARDS S/o Mr.S.Savarinathan
D.No.17/3, Rayappa Mudhaliyar Street,
Krishnagiri Taluk, Krishnagiri District.

நகல்
1. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), ஓசூர் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.
2. உறுப்பினர் செயலர் (பொ), ஓசூர் புதுநகர் வளர்ச்சி குழுமம், கிருஷ்ணகிரி மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், ஓசூர்.
3. வட்டாட்சியர், ஓசூர் தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைக்காகவும்.
4. சார் பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், கெலமங்கலம் தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைக்காகவும்.



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.

## empowering your real estate decisions with smart tools

### Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

### Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

### Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

### Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

### Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate